C.P.5/2019 08.11.2019

Thiru.அசோக்குமார் எம்டபுள்யூ - 2

குறுக்கு விசாரணை- ( 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகவில்லை எனவே 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை ஏதும் இல்லை என பதிவு செய்யப்பட்டது)

குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பு) - இவ்வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது ஆவணங்கள் மூலம் தெரியுமா என்றால் ஆவணங்கள் மூலமாகத்தான் தெரியும். மனுதாரர் 31.10.2009 தேதிவரை 1ம் எதிர்மனுதாரரிடம் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். 01.11.2009 தேதி முதல் 1ம் எதிர்மனுதாரரின் எஸ்டேட்டை 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது என்றால் சரிதான். வேலை நீக்கம் செய்யப்பட்ட தேதியில் மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ்தான் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை வேலை நீக்கம் செய்யவில்லை என்றால் சரிதான், மனுதாரரை எந்த அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் வேலை நீக்கம் செய்தார் என்றால் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் அவரை வேலை நீக்கம் செய்யவில்லை 1ம் எதிர்மனுதார் நிர்வாகம் அவரை வேலை நீக்கம் செய்த பிறகு மனுதாரர் வேலைக்கு ஆஜராகாமல் இருந்ததற்கு 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் நிலையாணைகள்படி குறிப்பாணை அனுப்பியதா என்றால் நாங்கள் மனுதாரரை வேலை நீக்கம் செய்யவில்லை என்பதால் குறிப்பாணை வழங்க வேண்டிய அவசியம் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு தமிழ்நாடு தோட்ட அதிபர்கள் சங்க கூட்டு நிலையாணை பொருந்தும் என்றால் ஆமாம். மனுதாரர் வேலை நீக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்த தொழில் தாவாவில் 26/2011 ல் 2ம் எதிர்மனுதார் நிர்வாகம் எதிர்உரை தாக்கல் செய்தது என்றால் ஆமாம். அந்த எதிர்உரையில் மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர்தான் வேலை நீக்கம் செய்தார் மனுதாரர் எங்கள் எஸ்டேட்டிற்கு வேலைக்கு வருவதில்லை என்றும் கூறியுள்ளோமா என்றால் கூறியுள்ளோம். மேற்படி தொழில் தாவாவில் 1ம் எதிர்மனுதார் நிர்வாகம் 2ம் எதிர்மனுதார் நிர்வாகம் ஒரே மாதிரியான சங்கதிகளை கூறித்தான் எதிர்உரை தாக்கல் செய்துள்ளது என்றும் அதில் 2ம் எதிர்மனுதார் கேட்டுக்கொண்டதன்பேரில் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை வேலை நீக்கம் செய்தது என்று கூறியுள்ளோம் என்றும் ஆனால் தற்போது அதற்கு மாறாக மனுதாரர் வேலை நீக்கம் செய்யப்பட்டது பற்றி தெரியாது என்று நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, 2ம் எதிர்மனுதார் தொழில்தாவாவிலும் இந்த மனுவிலும் ஒரேமாதிரியாகத்தான் எதிர் உரை தாக்கல் செய்துள்ளார். குத்தகை ஒப்பந்தம் சரத்து 16 படி 1.11.09 தேதிக்கு பிறகு 1ம் எதிர்மனுதார் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றும் 2ம் எதிர்மனுதார்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி குத்தகை ஒப்பந்தம் சரத்துக்களுக்கு மாறாக பழி வாங்கும் நடவடிக்கையில் 1ம் எதிர்மனுதாரரும் நாங்களும் சேர்ந்து மனுதாரரை வேலை நீக்கம் செய்துவிட்டு தற்போது அவருக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களை வாங்காமல் தவிர்க்கும் எண்ணத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. குத்தகை ஒப்பந்தத்தில் 1ம் எதிர்மனுதாரர் சம்மதம் பெறவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனால் 1ம் எதிர்மனுதாரர் சம்மதம் கொடுத்தால்தான் நாங்கள் மனுதாரரக்கு வேலையும் பணப்பயன்களும் கொடுக்க முடியும். தொழில்தாவாவில் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தின்படி 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் மனுதாருக்கு வேலையும் மற்ற பலன்களும் வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குத்தகை ஒப்பந்த சரத்துப்படி 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் மனுதாருக்கு பண பலன்களை வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தை 2ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றும் அதை தவிர்க்கும் எண்ணத்தில் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.